1972 டிசம்பர் 13]

Technical Education for Women.

*144 Q.—THIRU R.R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a number of women students have applied for B.E. course during 1972–73; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இவ்வாண்டு பொறியியற் கல்லூரிகளில் சேர 33 மாணவிகள் மனுச் செய்தனர். அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கனவே பெண்கள் யாரும் பி.இ. பட்டம் பெற்று இருக்கிறார்களா? அப்படி அவர்கள் பி.இ. பட்டம் பெற்று இருந்தால், எந்தெந்தப் பகுதிகளில் அவர்கள் பொறியாளர்களாக வேலை செய்கிறார்கள் அல்லது பொறியாளர் வேலைக்குச் செல்லாமல் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்களா என்று விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கனவே பி. இ. பட்டம் பெற்ற மாணவிகள் இருக்கிறார்கள். அவர்கள் வேலை பார்க்கிறார்களா அல்லது தனியாக இருக்கிறார்களா என்ற விவரக் குறிப்பு இல்லை. அது தனியாகத்தான் ஆராயப்பட வேண்டும்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இப்போது பெண்கள் பி.இ. பட்டம் படிக்க மிகவும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கல்லூரிகளில் உணவு விடுதி இல்லாததால் அவர்கள் வருவதற்குத் தயங்குகிறார்கள். விடுதி தனியே கட்டித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விண்ணப்பம் வருமானால் கவனிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் எத்தனை பெண்கள் பி.இ. படித்து பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[1972 டிசம்பர் 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கு முன்பு எத்தனை பேர் படித்து இருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. இந்த ஆண்டு 33 பேர் விண்ணப்பம் செய்தார்கள். 33 பேரும் முதல் ஆண்டு பொறியியல் வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, பி.இ. படித்த பெண்கள் நல்ல முறையில் பணிபுரிகிறார்கள். வீட்டு வசதி வாரியத்தில் கூட ஜார்ஜ் என்ற அம்மையார் நல்ல முறையில் பணி புரிந்து வருகிறார்கள். பெண்கள் குறைவான அளவில் படிப்பதால் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தரவும் அரசு முன் வருமா? எல்.சி.இ. போன்ற படிப்பு படித்த பெண்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசு உதவி செய்ய முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு 33 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு இவ்வளவு பேர் சேர்க்கப்படவில்லை. அவர்களின் தகுதி, நிலைமைகளுக்கேற்ப வேலை வாய்ப்புத் தருவதில் மற்றவர்களுக்கு எப்படித் தரப்படுகிறதோ அந்த முறையில் அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, already there are hundreds of engineers who do not have opportunities of joining departments. Now we are admitting women candidates also. May I know whether the Government would consider the employment opportunities for these candidates before giving admission to these women?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 2–3 ஆண்டுகளுக்கு முன்னால் படித்த பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதில் சிரமம் இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியதற்குப் பின்னாலே இப்போது அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. அதைத் தவிர, வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு நிதி உதவி செய்யும் அடிப்படையில் 2–3 பொறியாளர்கள் சேர்ந்து ஒரு தொழில் ஆரம்பிக்க வாய்ப்பு அளிக்கும் வகையில் சலுகை கொடுத்து இருக்கிறோம். அதைத் தவிர பெரிய தொழிற்சாலைகளில் இரண்டாண்டு காலம் அப்பிரண்டிஸ் என்ற முறையில் பணியாற்றுவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் துறையில் நெருக்கடி இல்லை.